செய்தி வெளியீடு எண் : 13 நாள் :14.10.2020

**தேனி மாவட்டம்**
**தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கான கொரோனா (COVID-19) தடுப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

*******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த உரிமையாளர்களுடனான கொரோனா (COVID-19) தடுப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.10.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழக அரசு, மக்கள் தங்களது தேவைகளுக்குகென அரசை எப்போதும் சார்ந்து இராமல், தங்கள் சொந்த கால்களிலேயே நின்று, தங்களது தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு அவர்களது பொருளாதார நிலை உயர வேண்டும் என்ற உயரிய நோக்கில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்காக எண்ணற்ற திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அதன்படி, தேனி மாவட்டத்தில தொழில் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் கீழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தோர் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழக அரசால் போர்கால அடிப்படையில், கொரோனா தொற்றினை கட்டுப்படுத்திடும் பொருட்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளின்படி, தற்சமயம் தமிழகம் முழுவதும் தொற்றியின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, துரிதமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் அடிப்படையில், நமது மாவட்டத்தில் நோய்த்தொற்றின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் டெங்கு, சிக்கன்குனிய, பறவை காய்ச்சல் போன்று, கொரோனா தொற்றினை எளிதாக கருத்தில் கொள்ளாமல், அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ள நெறிமுறைகளை சரிவர பின்பற்ற வேண்டும்.

மேலும், தமிழக அரசு பொருளாதார ரீதியாகவும், பொதுமக்களின் நலன் கருதியும் கட்டுப்பாடுகளுடன் கூடிய பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளது. அதனை தொழில் சாலைகள் மற்றும் கட்டுமான தொழில் நிறுவனங்கள் சரிவர கடைபிடித்திட வேண்டும். அதன்படி, தொழில் சாலைகள் மற்றும் கட்டுமான தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் கருதி அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவுதல், சானிடைசர் உபயோகித்தல், பயணம் மற்றும் பணிபுரியும் போது சமூக இடைவெளியை பின்பற்றுதல், கண்டிப்பாக அனைவரும் முகக் கவசம் அணிதல், நோய் அறிகுறி தென்படுபவர்களை உடனடியாக கோவிட் - 19 பரிசோதனைக்கு உட்படுத்துதல், நோய் கட்டுபாட்டு பகுதியில் இருந்து பணியாளர்கள் வருவதை தவிர்த்தல், போன்றவைகளையும்,

சிட்கோ மற்றும் ஏற்றுமதி தொழிற்சாலைகளில் தனித் தனி நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயில்களை அமைத்தல், நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு 14 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கி தனிமைப்படுத்துதல், 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் உடல் நலத்தின் அடிப்படையில் வீட்டில் இருந்து பணியாற்ற வாய்ப்பு அளித்தல், பணியாளர்களுக்கு உரிய மருத்துவ வசதி மற்றும் சிகிச்சையை உறுதி செய்தல், வெளியில் இருந்து வரும் பணியாளர்களுக்கு சமூக இடைவெளியுடன் (50 சதவீத பயணிகள்) உரிய வாகன வசதி ஏற்பாடு செய்தல். (நான்கு சக்கர வாகனம் - 2, இரு சக்கர வாகனம் ஒருவர் மட்டும் அனுமதி)., நெறிமுறைகளை தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான தொழில் நிறுவனங்கள் கடைபிடித்திட வேண்டும்.

மேலும், தொழிற் சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களுக்கும் பயணத்திற்கு முன்னும் பின்னும் கிருமிநாசினி தெளித்தல், நுழைவு வாயில்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் உடல் வெப்பமானி கொண்டு பரிசோதனை மேற்கொண்டும் மற்றும் தொழிற்சாலையின் அனைத்து பகுதிகளிலும் குறிப்பாக மக்கள் பயன்படுத்தும் பகுதிகளில் தினம் இருமுறை கிருமி நாசினி (2.5% Lysol) தெளித்தல், தினம் தோறும் தொழிற்சாலையின் தரையை கிருமிநாசினி கொண்டு (Hypochlorite solution) சுத்தப்படுத்துதல், தேவையற்ற நபர்கள் தொழற்சாலைக்குள் வருவதை தவிர்த்தல், தொழிற்சாலையின் உணவகங்களில் சமூக இடைவெளியை பின்பற்றுதல், ஒருமுறை  பயன்படுத்தகூடிய குவளை தட்டுகளை வழங்குதல், ஒரு பக்க இருக்கை வசதிகள் அளித்தல், மின் தூக்கியில் 2 அல்லது 4 நபர்கள் மட்டும் அனுமதித்தல், குறிப்பாக, பணியாளர் தங்கும் இடங்களில் சமூக இடைவெளியுடன் படுக்கை வசதி, சோப்பு, சானிடைசர் வசதி, தனிநபர் பாதுகாப்பு கவசங்களுடன் தினந்தோறும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்தல், பணியாளர் உடல் நலம் அறிய அடிக்கடி உடற்பரிசோதனை செய்தல் போன்ற நெறிமுறைகளை நெறிமுறைகளை தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான தொழில் நிறுவனங்கள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்தி வேண்டும். கொரோனா நோய் தொற்றினை தவிர்த்திடும் பொருட்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு தொழில் நிறுவனங்கள் முழு ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) ஆர்.தியாகராஜன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) எஸ்.செந்தில்குமார், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் இல.ராமசுப்பிரமணியன், தொழில் நிறுவனங்கள் மற்றும் கட்டுமானத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**